

திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு – பெரியார் மாளிகையில் இருந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார் அவருடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பெரம்பலூர் பாராளுமன்ற எம்.பி. அருண் நேரு, மாநகராட்சி மேயர் அன்பழகன், தி.மு.க. மத்திய மாவட்ட துணை செயலாளர் முத்துச்செல்வம், பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர், வழக்கறிஞர்கள் கவியரசன் அந்தோணி மணிபாரதி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கான

# விபத்து மரண இழப்பீடு ரூ.2 லட்சமாக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு – அரசாணை வெளியீடு!

சென்னை, ஆக.24-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப் பின்படி நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வழங் கப்படும் விபத்து மரண இழப்பீடு தொகை ரூ.1 இலட் சம் என்பது ரூ.2 இலட்சம் ஆகவும், விபத்தினால் ஏற்ப டும் உடல் உறுப்பு இழப் பீட்டு தொகை ரூ. 20 ஆயி ரம் என்பது ரூ.1 இலட்சம் ஆகவும், இயற்கை மரணத் துக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூ.20 ஆயிரம் என்பது ரூ.30 ஆயி ரம் என உயர்த்தி உத்தரவுக் கான அரசாணை வெளியி டப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரம் வரு மாறு:-

2025 - 2026 -ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர் கள் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு, விபத்து மரணத்துக்கான இழப்பீடு, விபத்தினால் ஏற்ப டும் உடல் உறுப்பு இழப் பிற்கு நிதி உதவி, இயற்கை மரணத்துக்கான நிதி உதவி, இறுதிச்சடங்கு செய்வதற் கான நிதி உதவி ஆகியவை உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி, நிலமற்ற வேளாண் தொழி லாளர்களுக்கு விபத்து மர ணத்துக்காக வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகை ரூபாய் 1 இலட்சம் என்பதை ரூபாய் 2 இலட்சம் என்றும், விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்காக வழங் கப்பட்டு வரும் நிதிஉதவி ரூபாய் 20 ஆயிரம் என் பதை ரூபாய் 1 இலட்சம் என்றும், இயற்கை மரணத் துக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 20 ஆயிரம் என்பதை ரூபாய் 30 ஆயிரம் என்றும், இறு திச்சடங்குக்காக வழங்கப் பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 2,500 என்பதை ரூபாய் 10 ஆயிரம் என்றும் உயர்த்தி வழங்கிட முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள் ளார். இதற்குரிய அர சாணை 4.8.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

# எத்தனை முனை போட்டிகளானாலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை.ஆக. 24-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவ லக வளாகத்தில் நடை பெற்ற தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரி யம் சார்பில் அடையாள அட்டை மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்ட தமிழ்நாடு இயற்கை வளங் கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறு கையில்:

எடப்பாடி பழனிச்சாமி கூட்டம் நடக்கும் பகுதி யில் திமுக ஆம்புலன்ஸ் விடுகிறது என்று அவர் கற் பனையாக சொல்லும் கருத்துக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. ஆம்பு லன்ஸில் ஆட்கள் ஏற்றி செல்வதை அங்கு உள்ள பொதுமக்கள் பார்த்திருப் பார்கள். அதில் ஏமாற்றுவ தற்கு வழியில்லை. ஆம்பு லன்ஸை விட்டு எடப்பாடி பழனிச்சாமிக்கு கூடும் கூட்டத்தை கலைக்க வேண்டும் என்ற அவசியம் திமுகவுக்கு கிடையாது.

எடப்பாடி பழனிச்சா மியை வருகின்ற தேர்தலில் எதிர்க்கட்சியாகவே நினைக்கவில்லை. அவர் கள் எந்த கூட்டணியோடு வந்தாலும் எங்களைப் பொருத்தவரை திமுக கூட் டணி அசைக்க முடியாத சக்தியாக இருக்கிறது. எடப்பாடி பழனிச்சாமி கூட்டத்தில் ஆம்புலன்ஸ் விட்டு கூட்டத்தை கலைக்க வேண்டிய அவசி யம் திமுகவுக்கு இல்லை.

நாங்கள் வீடு வீடாகச் சென்று மக்களுடைய நாடியை பார்த்திருக்கின் றோம். இதுவரை எந்த தேர்தலிலும் ஒரு ஆறு மாதம் எட்டு மாதம் முன் னரே வாக்காளரை சந் தித்து அவர்களுடைய நாடியை பிடித்து பார்த்த கட்சி கிடையாது. அந்தக் கட்சி திமுக மட்டும் தான். திமுக தலைவர் மு க ஸ்டாலின் தான். அவர் மீது பொதுமக்கள் அதிக நம் பிக்கை வைத்துள்ளனர். இவர் தான் வேண்டும் இவ ரது ஆட்சி தான் வேண்டும் என்று தமிழ்நாடு மக்கள் உறுதியோடு இருக்கி றார்கள்.

நாங்கள் என்னென்ன செய்துள்ளோம் என்பதை மக்களிடம் சென்று சொல்ல வேண்டும். அதை சொல்வதற்கு மக்களை சந் திப்பது அவசியம். மக் களை சென்று சந்தித்தால் தான் நாங்கள் செய்ததை சொல்ல முடியும். அவர்க ளும் புரிந்து கொள்ள முடி யும். அதற்காக மக்களை சென்று சந்திக்கின்றோம் அது தவறு கிடையாது.

தேர்தல் களத்தில் எத்த னையோ எதிர்க்கட்சிகள் தமிழ்நாட்டில் நிற்கின்றன. எங்களைப் பொறுத்தவரை திமுகவை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் படைத்த எதிர்க்கட்சி கிடையாது. ஆனால் நிறைய எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

திமுகவை ஒழிக்க எங்க ளால் மட்டும் தான் முடி யும் என்று எடப்பாடி பழ னிச்சாமி வசனம் பேசுவதற்கு வேண்டுமென் றால் வைத்துக் கொள்ள லாம். அந்த வசனம் தேர்த லிலோ மக்கள் மத்தியிலோ எடுபடாது.

30 நாள் சிறையில் இருந் தால் பதவி இழப்பு சட்ட மசோதா குழுவுக்கு சென் றுள்ளது இந்த சட்ட மசோதா வேண்டுமென்றே எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற மாநிலத்தில் எதிர்க்கட்சி களை ஒடுக்குவதற்காக நசுக்குவதற்காக அவர்களி டமிருந்து ஆட்சி அதிகா ரத்தை பிடுங்குவதற்காக மறைமுகமாக எடுப்பதற் காக இது மாதிரியான சட் டங்கள் அவர்கள் கொண்டு வர முயற்சிக்கலாம். இந்த முயற்சிகள் எல்லாம் நீதி மன்றம் மூலமாகவும் அதே போல நாடாளுமன்றத் தின் மூலமாகவும் தடுத்து நிறுத்தப்படும்.

எத்தனை முனை போட் டிகள் இருந்தாலும் திமுக வின் கூட்டணி வெற்றி மிக எளிதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

# திருவாரூர் குடவாசலில் ரூ.15 கோடி மதிப்பில் புதிய கல்லூரி கட்டிடம்!

## அமைச்சர் கோவி.செழியன் – பூண்டி. கே.கலைவாணன் ஆய்வு!

திருவாரூர், ஆக. 24 –

திருவாரூர் மாவட்டம் குடவாசலில் கடந்த 2017 ஆம் ஆண்டு அப்போதைய அதிமுக ஆட் சியில் அரசு கலை மற்றும் அறிவி யல் கல்லூரி துவங்கப்பட்டது . தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக இந்த கல்லூரி குடவாசல் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தான் கல்லூரி இயங்கி வந்தது. செயல்பட்டு வருகிறது.

எம்.ஜி.ஆர். பெயரில் கல்லூ ரியை தொடங்கிய அ.தி.மு.க. அரசு, கல்லூரிக்கு தேவையான கட்டிடங் களை கட்டுவதற்கு எந்தவித முனைப்பும் காட்டாமல் இருந்தது. இது குறித்து கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலமுறை போராட்டம் நடத்தியும் அப்போதைய அதிமுக அரசு கல்லூரி கட்டுவதற்கு எந்தவித முயற்சி எடுக்காமல் இருந் தது. இதனால் ஒரே இடத்தில் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்க ளும் பயிலக்கூடிய அவலம் நிகழ்ந்து இருந்தது. இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தொடக்க கல்வி உயர்கல்வி இவைகளில் இந்திய அளவில் முதலிடத்திற்கு கொண்டு செல்லும் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலிண் அவர்களின் ஆட்சி அமைந்தது.

திருவாரூர் சட்டமன்ற உறுப்பி னர் பூண்டி கே.கலைவாணன் அவர் களின் தொடர் முயற்சியால் தமிழ் நாடுமுதல்வரின் வழிகாட்டுதல் களின்படி இக்கல்லூரிக்கு புதிதாக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. புதி தாக கல்லூரி கட்டிடம் கட்டுவதற்காக தி.மு.க. மாவட்ட செயலாளரும், திரு வாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் ரூ 25 லட்சம் மதிப்பி லான தனக்கு சொந்தமான இடத்தை கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு அர சுக்கு தானமாக பத்திரப்பதிவு செய்து கொடுத்தார்.

இதையடுத்து அந்த இடத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கடந்த ஆண்டு கட்டிடம் கட்டும் பணி தொடங்கியது. இந்த கட்டிடத்தில் 14 வகுப்பறைகளும், 3 ஆய்வகமும், ஒரு நூலகம், 6 இதர அறைகளும், கருத்தரங்க அறை ஒன்று ஆகிய வைகளுடன் 43,324 சதுர அடி பரப் பளவில் இரண்டு தளத்துடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட கல்லூரிக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் இந்த கல் லூரி வளாகத்தில் அமைந்துள்ளது.

வரும் 25.08.2025.அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாக இந்த கல்லூரி கட்டிடத்தினை திறந்து வைக்க உள்ளார். இதனையடுத்து உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே. கலைவாணன், தஞ்சை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் குணசேகரன் ஆகியோர் பணிகள் நிறைவடைந்து தயார் நிலையில் உள்ள கல்லூரி கட்டிடத்தினை ஆய்வு செய்தனர். அப்போது கழக நிர்வாகிகள், கல்வியாளர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



திருச்சி தெற்கு மாவட்ட மாநகரக் கழகக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகர அவைத் தலைவர் நூர்கான் தலைமையில், மாநகர கழக செயலாளர் மு.மதிவாணன், முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாநகரக் கழக நிர்வாகிகள் சந்திரமோகன், தமிழ்ச்செல்வன், பொன் செல்லையா, சரோஜினி, பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், மோகன், பாபு, விஜயகுமார், ராஜ் முஹம்மத், மணிவேல், சிவக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கத்தில் ஊடக விவாதங்களில் பங்கேற்கும் கழக முன்னணியினரையும் கழகத்தின் செய்தித்தொடர்புக் குழுவையும் சந்தித்து ஆலோசனைகளை வழங்கினார்.

### பீகாரில் ராஜ்கிரில் ஆக.29 முதல் செப். 9 வரை நடைபெற உள்ள

# “ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை - 2025”!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்!

சென்னை, ஆக.24-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள், பீகார் மாநிலம் ராஜ்கி ரில் 29.8.2025 முதல் 7.9.2025 வரை நடைபெற உள்ள “ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025” யை தமிழ்நாட்டில் பொதுமக் களின் பார்வைக்காக நேற்று முன்தினம் (22.08.2025) அறிமுகப்படுத்தினார்.

“ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025” பீகார் மாநி லம் ராஜ்கிரில் ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 7, 2025 வரை நடைபெற உள்ளது. சிறப்பு வாய்ந்த இந்தப் போட் டியில் 8 ஆசிய நாடுகள் மோதுகின்றன.

இப்போட்டியில் இந்திய அணி, மலேஷியா, ஜப் பான், சீனா மற்றும் கஜகஸ் தான் ஆகிய அணிகளுடன் A பிரிவில் இடம் பெற்றுள் ளது. கொரியா, வங்கதேசம் மற்றும் சீன தைபே அணி கள் B பிரிவில் இடம் பெற் றுள்ளன. இதில் ஆசிய பட் டம் வெல்லும் அணி 2026 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பைக்கு நேரடி யாக தகுதி பெறும்.

தமிழ்நாடு ஹாக்கி யூனிட் ஏற்பாட்டில் தமிழ்நாட்டில் ‘‘ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025” யை தமிழ் நாட்டில் பொதுமக்களின் பார் வைக்காக நேற்று முன்தினம் (22.08.2025) அறிமுகப்படுத்தி, ‘‘பாஸ் தி பால் டிராபி சுற்றுப் பயணத்தை’’ (PASS THE BALL TROPHY TOUR) துணை முதலமைச்சர் உத யநிதி ஸ்டாலின் அவர்கள், தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந் தியாவின் பல்வேறு மாநி லங்களுக்கும் பொதுமக்க ளின் பார்வைக்காக “ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை” பயணம் செய்ய உள்ளது.

இந்நிகழ்ச்சியில் இளை ஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செய லர் ஜெ.மேகநாத ரெட்டி, இந் திய ஹாக்கி சம்மேளனத் தின் பொருளாளரும் தமிழ்நாடு ஹாக்கி யூனிட் தலைவருமான சேகர் ஜெ. மனோகரன், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் பொருளாளர் கே. இராஜராஜன், தமிழ் நாடு ஹாக்கி யூனிட் இணை செயலாளர் டி. கிளெமென்ட் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### ஆக.27ஆம் தேதி

# சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஆக. 24-

சேலம் மத்திய மாவட் டக் கழக பொது உறுப்பி னர்கள் கூட்டம் வருகிற 27ஆம் தேதி நடைபெறுகி றது என்று மாவட்டச் செய லாளர் இரா.இராஜேந்தி ரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட் டக் கழக பொது உறுப்பி னர்கள் கூட்டம் 27.08.2025 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் மாளிகை“யில் மாவட்டக் கழக அவைத்த லைவர் ஜி.கே.சுபாசு தலை மையில் நடைபெறவுள் ளது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன் றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகர வட் டக்கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர்கள், பேரூர் வார்டு கழகச் செயலாளர் கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டு மென கேட்டுக்கொள்கி றேன்.

இவ்வாறு சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலா ளர் - அமைச்சர் இரா.இரா ஜேந்திரன் தெரிவித்துள் ளார்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக திறந்து வைக்கவிருக்கும் குடவாசல் கல்லூரி கட்டிடத்தினை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், தஞ்சை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் குணசேகரன் ஆகியோர் ஆய்வு செய்தனர். அப்போது கழக நிர்வாகிகள், கல்வியாளர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய வளர்ச்சி திட்டப் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் வேலுச்சாமி, முத்துக்குமாரசாமி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அருகில் உள்ளனர்.